ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2392/46 - 2024 ජූලි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.07.11

*2392/46 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 6/2013*(II)

**(454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம்**

முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவுகள் 95 மற்றும் 96 இன்கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**நாலக்க ஜூட் ஹரீன் பெர்னாண்டோ,**
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 09.*

1A - G 42216 — 05 (2024/7)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

*1948 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 9912 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1948 ஆம் ஆண்டின் முடிக்குரிய காணிகள் ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :*

"(1) அதன் 4 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(1) கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட வேண்டிய காலப்பகுதி ஐம்பது வருடங்களாதல் வேண்டும் :

ஆயினும், எவ்வாறாயினும் இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கருத்திட்டங்களின் வர்த்தக ரீதியான மற்றும் கமத்தொழில் செயற்பாடுகளுக்காக காணி ஒன்றினை குத்தகைக்கு எடுப்பதற்கான காலப்பகுதி தொண்ணூற்றியொன்பது வருடங்கள் ஆதல் வேண்டும். அத்தகைய குத்தகைக்கான இருபத்தைந்து சதவீதத்தில் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) முடிக்குரிய காணிகள் ஒழுங்குவிதிகளுக்கு செய்யப்பட்டதும் 2023, நவெம்பர் 23 ஆந் திகதிய 2359/31 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான திருத்தங்கள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

EOG 07-0108

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.